**சுருக்கம்**

நீர் வழங்கும் திட்டம் – தண்ணீர் எடுக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (Tamil Nadu Water Supply and Drainage Board) அனுமதி கோருதல் – நீர் உபயோகிப்பாளர் குழுவால் பரிந்துரைக்கப்பட்டது – ஆணை – வெளியிடப்படுகிறது.

-----------------------------------------------------------------------------------------

**பொதுப்பணி (டபிள்யூ2) த்துறை**

அரசு ஆணை (நிலை) எண். 4 நாள்: 06.01.2009

படிக்கவும்:

1. அரசு ஆணை (நிலை) எண். 700, பொதுப்பணித்துறை, நாள் 18.10.1996.
2. அரசு ஆணை (நிலை) எண். 242, பொதுப்பணித்துறை, நாள் 28.11.2006.

மீண்டும் படிக்கவும்:

3. முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை அவர்களின் கடித எண். எஸ்7(4))72908.96, நாள் 05.09.2007

------

**ஆணை:**

பார்வை 1ல் உள்ள அரசாணையில், நீர் உபயோகத்திற்காக உருவாக்கப்படும் திட்டங்களில் ஒரு எம்.ஜி.டி. அளவு அல்லது அதற்கு அதிகமான அளவுகொண்ட நீர் வழங்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க, நீர் உபயோகிப்பாளர் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தாமிரபரணி, காவிரி, கொள்ளிடம் ஆறுகளில் இருந்து ஒரு எம்.ஜி.டி. அளவுக்கு மேலாக, தண்ணீர் எடுக்க சில திட்டங்களுக்கு அனுமதி கோரியுள்ளது. மேற்கண்ட தண்ணீர் வழங்கும் திட்டங்கள் ஏற்கனவே தொழில் நுட்ப உபக்குழு கூட்டத்தில் கூர்ந்தாய்வு செய்து நீர் உபயோகிப்பாளர் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 28.07.2008 அன்று நடைபெற்ற நீர் உபயோகிப்பாளர் குழு கூட்டத்தில் கீழ்க்காணும் ஐந்து திட்டங்கள் தொழில் நுட்ப உபக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:-

(1) தாமிரபரணி ஆற்றின் உள் ஆழத்திலிருந்து 7.45 எம்.ஜி.டி. (அல்லது) 33.74 எம்.எல்.டி. தண்ணீரை, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மானூர் மற்றும் 5 இதர பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய 384 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம்.

(2) வல்லநாடு அருகில் உள்ள தாமிரபரணி ஆற்றின் உள் ஆழத்திலிருந்து 4.52 எம்.ஜி.டி. (அல்லது) 20.53 எம்.எல்.டி. தண்ணீரை, 222 கடற்கரை குடியிருப்புகள் உள்ள புதூர், விளாத்திகுளம் மற்றும் ஒட்டப்பிடாரம் பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய தூத்துக்குடி மாவட்டம் மற்றும் விருதுநகர், அருப்புக் கோட்டை நகராட்சிகள், கரியாப்பட்டி மற்றும் மல்லான்கிணறு நகர பஞ்சாயத்துகளில் உள்ள 68 ஊரக குடியிருப்புகள் உள்ளடக்கிய விருதுநகர் மாவட்டம் ஆகிய இடங்கள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம்.

(3) காவிரி ஆற்றின் உள் ஆழத்திலிருந்து 5.92 எம்.ஜி.டி. (அல்லது) 26.67 எம்.எல்.டி. தண்ணீரை, சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே உள்ள தொட்டியபட்டி என்ற இடத்திலிருந்து எடுத்து, சேலம் மாவட்டம் காடியாபட்டி மற்றும் 3 பஞ்சாயத்துகள் உள்ளடக்கிய 136 புளோரைட் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் (Fluoride affected habitations) மற்றும் 512 பாதை ஓர குடியிருப்புகளுக்கு விநியோகிக்க உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம்.

(4) பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர், செந்துறை, வேப்பூர், திருமனூர் மற்றும் ஆலத்தூர் ஆகிய இடங்களில் உள்ள 636 கிராம குடியிருப்புகள், குடிநீர் பெற கொள்ளிடம் ஆற்றின் உள் ஆழத்திலிருந்து (Sub surface water from Coleron) 14 எம்.எல்.டி. நீர் எடுக்க ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம்.

(5) தாமிரபரணி ஆற்றிலிருந்து 16.65 எம்.எல்.டி. தண்ணீரை உள் ஆழத்திலிருந்து எடுத்து, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஊரக குடியிருப்புகள் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி உட்பட்ட பகுதிகள் அதிக அளவில் பலன் பெற உருவாக்கப்பட்ட நீர் திட்டம். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வாசுதேவநல்லூர் மற்றும் பாப்பாக்குடி பஞ்சாயத்துகளில் அமைந்துள்ள 78 கிராம குடியிருப்புகளை உள்ளடக்கிய வாசுதேவநல்லூர், ராயகிரி மற்றும் ஆலங்குளம் பஞ்சாயத்து ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம்.

2. அரசு, நீர் உபயோகிப்பாளர் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தாமிரபரணி, காவிரி, கொள்ளிடம் ஆறுகளிலிருந்து நீர் எடுக்க, இவ்வாணையின் இணைப்பு – Iல் உள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு அனுமதி அளித்து ஆணையிடுகிறது. இவ்வாணையின் இணைப்பு – Iல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகளை கடைபிடித்து அதன்படி குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து அனுமதியளிக்கப்பட்ட அளவு தண்ணீரை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்க, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை மற்றும் அனைத்து நீர்வள ஆதாரத்துறை மண்டல தலைமைப் பொறியாளர்களுக்கும் ஆணையிடுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

எஸ். ஆதிசேஷையா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை 5.
ஆலோசகர் (நீர்வள ஆதாரம்) மற்றும் தலைவர், காவிரி தொழில் நுட்பக் குழுமம், சென்னை 8.
மண்டல தலைமைப் பொறியாளர்கள், சென்னை / திருச்சி / மதுரை / பொள்ளாச்சி.
அரசு செயலாளர், தொழில்துறை, சென்னை 9.
அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, சென்னை 9.
அரசு செயலாளர், விவசாயத்துறை, சென்னை 9.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை 5.
தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், நீர்வள ஆதாரத்துறை, சென்னை 5.
தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீராய்வு நிறுவனம், தரமணி, சென்னை 113.
தலைமைப் பொறியாளர், மாநில நில (ம) மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், சென்னை 113.
தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, நீர்வள ஆதாரத்துறை, சென்னை 5.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், அரியலூர், பெரம்பலூர் மற்றும் காஞ்சிபுரம்.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை 5.

நகல்
பொதுப்பணித்துறையின் அனைத்து பாசனப் பிரிவுகள்.
இகோ / உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு–I

**அரசு ஆணை (நிலை) எண். 4, பொதுப்பணி (டபிள்யூ2) த்துறை, நாள் 06.01.2009**

(1) இந்த நீர் விநியோக திட்டங்களில் உள்ள தொழில் நுட்ப மற்றும் பொருளாதார சூழ்நிலைகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (Tamil Nadu Water Supply and Drainage Board (TWAD Board)) முடிவு செய்து கொள்ள வேண்டும்.

(2) இத்திட்டங்கள் மூலம் எடுக்கப்படும் நீரினால், தற்போது அண்டை கிராமங்களில் விநியோகிக்கப்படும் நீருக்கு, எந்த பாதிப்பும் ஏற்படக் கூடாது.

(3) நீர் சேமிப்பு கிணறுகள் மற்றும் பம்புசெட் அறை ஆகியவை கட்டப்படும்போது, ஆறுகளில் பாயும் நீரினை தடுப்பதோ அல்லது ஆற்றின் திசைமாற்றம் ஆகியவை ஏற்படாமல் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மேலும், இந்த நீர் சேமிப்பு கிணறுகள் மற்றும் பம்புசெட் அறைகள் கட்டப்படும் முன், சம்மந்தப்பட்ட மண்டல தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை அவர்களிடம் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

(4) அனுமதியளிக்கப்பட்ட நீர் எடுக்கப்படும் பகுதியானது, ஆற்றின் பாதையிலிருந்தும், நீர் எடுத்துவிடும் பகுதியிலிருந்தும், தற்போது அமைந்துள்ள நீர் சேமிப்பு கிணறுகள் அமைந்துள்ள இடத்திலிருந்து 500 மீட்டர் தூரத்தில் அமையப் பெற்றிட வேண்டும்.

(5) ஆற்று படுகையில் சேதம் ஏற்படாத வகையில் குழாய்கள் பதிக்கப்பட வேண்டும். அவ்வாறு சேதம் ஏற்பட்டால், அதனை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தன் சொந்த செலவில் சரி செய்ய வேண்டும்.

(6) தண்ணீர் எடுப்பதால், ஆற்றின் நீர் பாய்ச்சல் தடுக்கப்படமாட்டாது என்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.

(7) ஆற்றின் தண்ணீர் தரை மட்டத்திற்கு கீழே 1.5 மீட்டர் ஆழத்திற்கும் அடியில்தான் குழாய்கள் பதிக்கப்பட வேண்டும்.

(8) ஆற்றின் ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு குழாய்கள் பதிக்கப்படும்போது, ஆற்றின் இரு கரைகளையும் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(9) ஆற்றின் கரைகளில் நடைபெறும் கட்டுமான பணிகள் அனைத்தும், நீர்வள ஆதாரத்துறையின் அலுவலர்கள் முன்னிலையில் தான் நடத்தப்பட வேண்டும்.

(10) ஆற்றில் தண்ணீர் இல்லாத நேரம் மற்றும் நீர் வராத சமயங்களில், கூடுதல் தண்ணீர் வேண்டுமென தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோரிக்கை வைக்கக் கூடாது.

(11) இது தவிர, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொழிற்சாலை மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள உரிமை பங்கு கட்டணங்களை (Royalty Charges) (அந்தந்த கால கட்டத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள கட்டணம்) ஒழுங்காக செலுத்தப்பட வேண்டும்.

(12) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் எடுக்கும் நீரினை அளக்க உரிய உபகரணங்களை (Water Meter) நிறுவ வேண்டும். மேலும், நீர் அளக்கும் கருவி (Water Meter) பொருத்தப்பட்டப்பின், அதனை பரிசோதனை செய்வதற்கான ஏற்பாட்டினை அந்நிறுவனம் செய்து தர வேண்டும்.

(13) அரசு மற்றும் நீர் உபயோகிப்பாளர்கள் குழுவினர் ஒப்புதல் இல்லாமல், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதல் தண்ணீர் எடுக்கக் கூடாது.

(14) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதற்கு முன் நீர்வள ஆதாரத் துறையுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

(15) அனுமதி வழங்கப்பட்ட அனைத்து நீர் வழங்கும் திட்டங்களும், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் சம்மதம் பெற்றப் பின்னரே தொடங்கப்பட வேண்டும்.

எஸ். ஆதிசேஷையா
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்